கோலாலம்பூர், ஆக. 24-

கோலாலம்பூர் மாநகர் மன்றம் நடத்திய ஒரு சோதனையில் மூன்று உணவுக் கடைகள் மிகவும் அசுத்தமாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அந்த உணவகங்களைத் தற்காலிகமாக மூடும்படியும் உத்தரவிடப்பட்டது.

வங்சாமாஜு பகுதியில் இந்த அதிரடிச் சோதனை நடத்தப்பட்டது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் முகநூலில் வெளியிட்ட அறிக்கை கூறியது.

ஜாலான் கோம்பாக், ஜாலான் செங்கால் செலாத்தான், பிளேட்டினம் வால்க், ஜாலான் டானாவ் நியாகா 1, தாமான் கோப்பராசி போலீஸ் பாசா 1, டேசா மெலாவத்தி டைமண்ட் ஸ்குவேர், ஜாலான் உசாகாவான் 7, கம்போங் பாடாங் பாலா ஆகிய பகுதிகளில் உள்ள உணவுக் கடைகளில் அதிரடிச் சோதனை நடத்தப்பட்டதாக அந்த அறிக்கை தெரிவித்தது.





மொத்தம் 32 உணவுக் கடைகள் சோதனை செய்யப்பட்ட வேளையில் 3 கடைகள் மிகவும் அசுத்தமாக இருந்ததால் மூடும்படி உத்தரவிடப்பட்டது. மொத்தம்

தரையில் எலி, கரப்பான் பூச்சிகளின் எச்சங்கள்

3 உணவுக் கடைகளை மூடும்படி உத்தரவு

கோலாலம்பூர் மாநகர் மன்றம் அதிரடி

44 சம்மன்கள் வெளியிடப்பட்டன. உணவுக் கடைக்காரர்களும் ஊழியர்களும் காலரா தடுப்பூசி போடாதது, உணவுகளைக் கையாளும் பயிற்சியில் பங்கேற்காதது உள்ளிட்ட குற்றங்களுக்காகவும் சம்மன் வெளியிடப்பட்டது.

சமையல் எண்ணெய் பயன்படுத்தப்பட்ட பிறகு அதனை முறையாகப் பராமரிக்கும் வசதி இல்லாதது, உணவுகள் வைக்கப்பட்ட இடத்திலும் சமையல் அறையிலும் எலிகள், கரப்பான் பூச்சிகளின் எச்சங்கள் இருந்தது ஆகிய குற்றங்களும் இதில் கண்டுபிடிக்கப்பட்டன. அது மட்டுமன்றி இந்த மூன்று உணவுக் கடைகளின் தரைப் பகுதியும் சுவரும் சமையல் அறையும் மிகவும் அசுத்தமாக இருந்திருக்கிறது.

தரையில் உணவுகளின் கழிவுகள் கிடந்திருக்கின்றன. அதுமட்டுமன்றி ஐந்தடியில் மேஜை, நாற்காலி வைக்கப்பட்டிருந்தது, வர்த்தக லைசென்ஸ் இல்லாதது ஆகிய குற்றங்களுக்காகவும் சம்மன் வெளியிடப்பட்டது.